SFM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

**11** - ஆம் வகுப்பு

# பொதுத்தமிழ்

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

## பகுதி - I

**I பலவுள் தெரிக.** 10 X 1 = 10

1. தன் இனத்தையும் மொழியையும், பாடாத கவிதை, வேரில்லாத மரம் ; "கூடில்லாத பறவை" என்று பாடியவர் யார்?

அ) சு. வில்வரத்தினம் ஆ) பாரதியார்
இ) இரசூல் கம்சதோவ் ஈ) பாரதிதாசன்

2. "உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே" என்று பாடியவர்

அ) பிரமிள் ஆ) பவணந்தி முனிவர் இ) பாரதிதாசன் ஈ) சு.வில்வரத்தினம்

3. ஜனவரி 14-ஆம் நாளைத் தமிழர் பாரம்பரிய நாளாகப் பிரகடனப்படுத்திய நாடு எது?

அ) இந்தியா ஆ) கனடா இ) சீனா ஈ) அமெரிக்கா

4. பொருத்துக.

அ) முத்துலிங்கம் - பேச்சுமொழியும் கவிதை மொழியும்
ஆ) சு. வில்வரத்தினம் - நன்னூல்
இ) பவணந்தி முனிவர் - யுகத்தின் பாடல்
ஈ) இந்திரன் - ஆறாம் திணை

1) ஈ, இ, ஆ, அ 2) ஆ, அ, இ, ஈ 3) இ,ஈ,அ,ஆ ஈ) ஆ,ஈ,அ,இ

5. 'அறிவும் ஒழுக்கமும்' என்பதன் இலக்கணக் குறிப்பு

அ) பண்புத்தொகை ஆ) எண்ணும்மை இ) வினைத்தொகை ஈ) உம்மைத்தொகை

6. ஈரொற்று மெய்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல்

அ) துன்பம் ஆ) மகிழ்ச்சி இ) ஆர்வம் ஈ) முயற்சி

7. 9 அடி சிற்றெல்லையும் 12 அடி பேரெல்லையும் கொண்ட நூல்

அ) குறுந்தொகை ஆ) நற்றிணை இ) ஐங்குறுநூறு ஈ) கலித்தொகை

8. ஒப்புரவு என்பதன் பொருள்

அ) நாட்டுக்கு உதவுவது ஆ) ஊருக்கு உதவுவது
இ) அரசுக்கு உதவுவது ஈ) மக்களுக்கு உதவுவது

9. கோடு, மலை, சிகரம், விளிம்பு, எல்லை முதலிய பொருள்களைத் தரும் சொல்

அ) வரை ஆ) குன்று இ) அருகில் ஈ) தொடர்

10. அழகிய பெரியவன் எந்தப் புதினத்திற்காக அரசு விருது பெற்றார்?

அ) காவியம் ஆ) ஆறாம் திணை இ) யானை டாக்டர் ஈ) ஏதிலி குருவிகள்

## பகுதி - II பிரிவு - 1

**II எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

11. எர்னஸ்ட் காசிரர் மொழி குறித்து கூறுவது யாது?



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

12. தமிழர்கள் புகழ் பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாகப் புறநானூறு கூறுகிறது?

13. மசானபு ஃபுகோகா குறிப்பிடும் ஐந்து வேளாண்மை மந்திரங்கள் யாவை?

14. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?

15. குறுந்தொகைப் பற்றி நீங்கள் அறியும் செய்திகள் யாவை?

## பிரிவு - 2

**III எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.** 5 X 2 = 10

16. **தமிழாக்கம் தருக.**

அ) organic farming ஆ) Harvesting

17. தொடரிலுள்ள சொற்களை ஒழுங்குப் படுத்தி இரண்டு சொற்றொடர் தருக.

அ) ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

ஆ) கோசல மக்கள் நாட்டு மகிழ்ச்சியாக வந்தனர் வாழ்ந்து

18. ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி கூறுக.

அ) புகழெனில் ஆ) தண்டுடை

19. பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) பிரிந்தோர் ஆ) துஞ்சல்

20. `பேசு' என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் வினையாலணையும் பெயர் இவற்றைத் தொடரில் அமைத்து எழுதுக.

21. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?

## பகுதி - III

**IV எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.** 3 X 4 = 12

22. வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

23. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிசிந்து – விளக்குக.

24. தமிழாக்கம் தருக.

அ) In nature, light creates the colour. In the picture creates the light.

ஆ) Roads were made for journeys not destinations.

இ) The pen is mightier than the sword.

ஈ) Work while you work and play while you play

25. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது – என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

26. `ஏவல் மறுக்கும் சிறுவினை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்உணர்ந்தனள் கொல்' – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

## பகுதி - IV

**V ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக.** 1 X 6 = 6

27. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக. ***(அல்லது)***
கொடையில் சிறந்து விளங்க வள்ளுவம் கூறும் வழிகளை ஒப்புரவு அறிதல் அதிகாரம் வழி நிறுவுக.

## பகுதி - V

**VI மனப்பாடல் பாடல்களை அடிபிறழாமல் எழுதுக.** 4 + 2 = 6

28. அ) `உண்டால் அம்ம' ............... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.
ஆ) "பொருட்டு" என முடியும் குறட்பா.



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com